**செ. கு. எண்: 018** **நாள்: 08.02.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 8.2.2020</u>

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், டி. நல்லாளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மனைவி திருமதி ஜெயசெல்வி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், களப்பாகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்கையா என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சித்தரரேவு கிராமத்தைச் சேர்ந்த திரு. மொட்டையாண்டி என்பவரின் மனைவி திருமதி காட்டுராணி என்பவர் எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கூத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மருதமுத்து என்பவரின் மகன் திரு. முனியாண்டி என்பவர் விவசாய நிலத்தில், மின்மோட்டாரை இயக்க முற்பட்ட போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், தருமநீதி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மகன் திரு. நடராஜன் என்பவர் மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருநந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மனைவி திருமதி மகேஸ்வரி என்பவர் விவசாய நிலத்தில், மின்மோட்டாரை இயக்க முற்பட்ட போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், காட்டுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. புங்காலு நாயுடு என்பவரின் மகன் திரு. குமார் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா கிராமத்தைச் சேர்ந்த திரு. வடிவேல் என்பவரின் மகன் செல்வன் ஹரிஹரன் என்பவர் விளையாடிக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின் கம்பி பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோலைக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மனைவி திருமதி ஜெயா என்பவர் தெருவில் இருந்த மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியன் என்பவரின் மனைவி திருமதி தமிழ்செல்வி என்பவர் உயர் அழுத்த மின் கம்பி பட்டு, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கொடிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சாகுல்ஹமீது என்பவரின் மகன் திரு. அலிஷியாம் என்பவர் மின் கசிவு ஏற்பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், போட்டுக்குழி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் திரு. வில்லாளி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்கதாசம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி என்பவரின் மகன் திரு. கணேசன் என்பவர் விவசாய நிலத்தில், எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவரின் மகன் திரு. விஷ்ணு என்கிற முருகவேல் என்பவர் இரும்பு கம்பிகளை இறக்கி வைக்கும் போது, எதிர்பாராத விதமாக மின்கம்பியில் பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், வெள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வரதராஜன் என்பவரின் மகன் திரு. பன்னீர்செல்வம் என்பவர் மின் கம்பி பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், தி. பாஞ்சாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வாசுதேவக்கவுண்டர் என்பவரின் மகன் திரு. ராமமூர்த்தி என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பெரியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமன் என்பவரின் மகள் செல்வி வர்ஷா என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த 17 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த **17 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**